பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/8945/78

மலர்: 20 மார்கழி 27 ஸபர் 11 இதழ் 327
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-1-79

UNIVERSITY OF SRI LANKA RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

# இரு கட்சிகளுக்கிடையில் விசித்திரப் போராட்டம்

## அஞ்சலிக் கூட்டத்தில் கூட்டணித் தலைவர்

[யாழ்ப்பாணம்]

''கொழும்பு, பதுளை போன்ற இடங்களில் தமிழ்மக்களுக்கு எதிராக இனத்துவேஷம் கிளப்பப்பட்டுவருகிறது. ஐக்கியதேசியக் கட்சியினரா, சுதந்திரக்கட்சியினரா தமிழரை முதலில் தாக்குவதென்ற போராட்டமே இரு கட்சிகளுக்குமிடையில் நடந்துவருகிறது''.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிர்நீத்தவர்களுக்காக நேற்றுக்காலை யாழ். முற்றவெளி மைதானத்தில் நினைவு ஸ்தூபிகளுக்கருகில் நடந்த அஞ்சலிக்கூட்டத்தில் நல்லூர் எம்.பி திரு.எம். சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## தொகுதிக்கு 5 வீடுகள் கட்டும் திட்டம்

# யாழ்.மாவட்டத்தில் 35 வீடுகள்

# இம்மாதம் அங்குரார்ப்பணம்

## எம்.பி.க்கள் திறந்துவைப்பர்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் தொகுதிக்கு 5 வீடுகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழு தொகுதிகளில் 35 வீடுகளை தேசிய வீடமைப்பு திணைக்களம் கட்டி முடித்துள்ளது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் இம்மாதம் ஒவ்வொரு தொகுதியிலும் குறிப்பிட்ட தினங்களில் அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படும்.

இதன்படி கிளிநொச்சித் தொகுதியில் 12-ம் திகதி காலை 9-30 மணிக்கும், சாவகச்சேரியில் 11-ம் திகதி காலை 9-00 மணிக்கும், ஊர்காவற்றுறையில் 14-ம் திகதி மாலை 4-00 மணிக்கும், கோப்பாயில் 13-ம் திகதி மாலை 2-00 மணிக்கும், மானிப்பாயில் 14-ம் திகதி பகல் 12 மணிக்கும், யாழ்ப்பாணத்தில் 15-ம் திகதி காலை 9 மணிக்கும் திறப்பு விழாக்கள் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி சகல உதவி அரசாங்க அதிபர்களையும் தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் கோரியிருக்கிறார். (கெ)

## சிங்கப்பூரில் வேலைதேடிச் சென்றவர்கள்

### யோகேஸ் உதவ முயற்சி

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்புத்தேடிச் சிங்கப்பூருக்குச் சென்று திக்குத்திசை தெரியாமல் அவதிப்படும் இளைஞர்கள் பற்றித் தகவல் இடைக்கப்பெற்ற யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ.

(8ம் பக்கம் பார்க்க)

## ஓசிப் பிரயாணம் ஒருவார சிறை

[யாழ்ப்பாணம்]

இ. போ. ச. பஸ்ஸில் ஓசிப் பயணம் சென்ற பிரயாணி ஒருவருக்கு யாழ். நீதவான் திரு. திஸநாயக்கா ஒருவார சிறைத்தண்டனை விதித்தார்.

வசாவிளானிலிருந்து திருநெல்வேலிக்கு சென்ற பஸ்ஸில் ஒருவர் டிக்கட்டின்றி பிர

[8ம் பக்கம் பார்க்க]

## தமிழாராய்ச்சி மாநாட்டின் போது

# உயிர்நீத்தவர்களுக்கு சமயாசாரத்துடன் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சியின் போது உயிர் நீத்தவர்களுக்கு, நேற்றுக்காலை சமய ஆராதனைகளுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களான திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், வ. யோகேஸ்வரன், வி. தருமலிங்கம், வி. ஆனந்தசங்கரி, நா திருநாவுக்கரசு, எஸ். கதிரவேலுப்பிள்ளை, தா இராசலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் வது மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்கள்.

முன்னாள் மேயர் திரு. சி. நாகராசா சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், திரு. என், ரி. செல்லத்துரை, திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. அம்பு சுந்தையா. திரு. க. சச்சிதானந்தன், கனக மனோகரன், சிவமகாராசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், உயிர்நீத்தவர்களின் உறவினர்கள் உட்பட அநேகர் இந்த அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

பாடசாலை மாணவர்கள், பிரார்த்தனை கீதங்கள் இசைத்தனர் மக்கள் ஒவ்வொருவராக சென்று மலர் அஞ்சலிசெலுத்தினர்கள்.

நினைவு தூண்களைசுற்றி பந்தல் அமைக்கப்பட்டு, மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு. அப்பந்தலில் சமய

(8-ம் பக்கம் பார்க்க)

# மட்டுநகருக்கு மின்இணைப்பு 1 கோடி, 6லட்சம் செலவு

[கொழும்பு]

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை, பொலனறுவை மாவட்டங்களில் மீண்டும் மின்சாரம் வழங்குவதற்கு ஒரு கோடியே 70 லட்சம் ரூபா மின்சார சபை செலவிடவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 1 கோடியே 6லட்சம் ரூபா செலவில் திருத்த வேலைகளை சபை மேற்கொள்ளும். [இ]

# கல்விக், கந்தோரில் பெற்றோர்முற்றுகை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் பிரசித்த கல்லூரிகளில் 6ம் வகுப்புகளில் இடங்கிடைக்காத பெற்றோர்கள் நேற்று கல்விக்கந்தோரை முற்றுகையிட்டனர்.

கடந்த நவம்பர் மாதம் நடந்த 6ம் வகுப்பு பரீட்சையில் தேவையான புள்ளிகளை எடுக்காத மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், அவர்கள், தாங்கள் பயின்ற பழைய பாடசாலையிலேயே தொடர்ந்துபயிலவேண்டும் என்றும், வடமாநில கல்வி அதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

பெற்றோர்கள் தேவையானால் இவ்விடயம் தொடர்பாக கல்வி அதிகாரி திரு, நல்லையாவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (க)

## பீட்டர்கெனமன் ஜன. 20-ல் யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பீட்டர்கெனமன் இம்மாதம் 20ம் திகதியே யாழ்ப்பாணம் வரவிருக்கிறார் என்றுகட்சியின் யாழ். மாவட்ட உதவிச்செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் தெரிவித்துள்ளார்.

20ம் திகதி யாழ். நகரில் 'இன்றைய அரசியல் நிலை' குறித்து பொதுக்கூட்டம் ஒன்றில் திரு கெனமன் உரையாற்றுவார் என்றும் மறுநாள்காலை வடபகுதி கட்சி அங்கத்தவர்கள் கலந்துகொள்ளும்பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

21ந் திகதி மாலை திரு.கெனமன் உடுப்பிட்டித் தொகுதிக்குச்செல்வார் என்றும் திரு.விஜயானந்தன் தெரிவித்தார்.

திரு. கெனமன் இம்மாதம் 10ம் திகதியே உடுப்பிட்டிக்கு வருவார் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அவரது விஜயம் 21ந் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று நமது நெல்லியடி நிருபர் தெரிவித்துள்ளார். [இ]

## யாழ். சீனக் கம். வாதிகள் கைகலப்பு:

# நூல்நிலையத்தில் அத்துமீறி நுழைந்து தாக்கினர்களாம்!

[கொக்குவில்]

சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் [யாழ் கிளை] இரு பிரிவினருக்கிடையி ஏற்பட்ட மோதலினால் சட்டத்தரணி ஒருவர் உட்பட சிலர் யாழ். பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் பின்னர் யாழ். நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டு ரூபா 1000 சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## கைதானவர்கள் பிணையில் சென்றனர்

யாழ். முனீஸ்வரன் வீதியிலுள்ள புத்தகசாலை முகாமையாளர் திரு. செந்திவேல் யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள புகாரில் செவ்வாய்க் கிழமை நண்பகல் தான் புத்தக நிலையத்தில் இருந்த போது அங்கு வந்த இருபத்திரண்டு பேர் அத்துமீறி புத்தக நிலையத்துள் பிரவேசித்துத் தன்னை தாக்கிவிட்டு, மேசைக்குள் இருந்த 500 ரூபா பணத்தை கொள்ளை அடித்துச் சென்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, புத்தக நிலைய முகாமையாளரை தாக்கியது, அத்துமீறி உட்பிரவேசித்தது, புத்தக நிலையத்தை உடைத்துச் சேதப்படுத்தியது, 500 ரூபாவைக் கொள்ளை அடித்தது ஆகிய நான்கு குற்றச்சாட்டிகளின் பேரில் யாழ். குற்றத்தடுப்பு பகுதி பொறுப்பதிகாரி திரு. பிரீஸ் ஜெயவர்த்தன சந்தேகத்தின் பேரில் 22 பேரைக் கைது செய்துள்ளார்.



யாழ்ப்பாண
மருத்துவ சங்கம்

மருத்துவ நூல்
நிலையத்திற்காக

அளிக்கும்

திருமதி
மாலதி
சிவகுமார்

அவர்களின்

# பரதநாட்டியம்

28-1-1979 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி
வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
டிக்கட் விபரம்:
றிசேவ்ட்: ரூபா 50/- (2 ஆசனங்கள்)
ரூபா 30/- (1 ஆசனம்)
1-ம் வகுப்பு: ரூபா 20/- - 2-ம் வகுப்பு: ரூபா 10/-

(1287)


எனது இல: 21/78.

## பிஸ்கால் ஏல விற்பனை

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்,
1 கந்தையா சண்முகரத்தினமும் பெண்
2 அன்னம்மாவும், நாவற்குளி.
— வழக்காளிகள்.

இல: 5147.

எதிராக
1. வேலுப்பிள்ளை ஐயாத்துரைப் பத்தரும்
2. பெண் செல்வமணியும் இருவரும்.
நாவற்குளி, கிழக்கு, கைதடி.
— எதிராளிகள்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் 5147 ம் இலக்க வழக்கில் 23-9-76-ம் திகதித் தீர்வைப்படி ரூபா 2000/-மும் அதற்கு 22-5-76 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 12% வீத வட்டியும் பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவிடுவதற்காக பின்னால் காணும் ஆதனத்தில் எதிராளிகட்கு உள்ள உரித்து சோந்தை முதலியவற்றை 1979-ம் ஆண்டு மாசிமாதம் 9-ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3-00 மணிக்குத் தொடங்கி என்னால் குறித்த காணியில் நின்று விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்
ஆ. குணநாயகம்,
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி. 28-12-78.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளி கோவிற்பற்று நாவற்குளி இறை சாத வாய்க்கால் வயல் நெ. பர. 23 குழி 10. இதில் மேற்குப் புறமாக நெற். பர. 2 குழி 10 நீக்கி மிகுதி நெற். பர. 21. இருபத்தொன்றுக்கு எல்லை கிழக்கு: வாய்க்கால், வடக்கு: முருகேசு கனகரெத்தினத்திற்கும் பங்காளருக்குமுரிய வாதனம் மேற்கு: வேலுப்பிள்ளை சுப்பிரமணியதுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். தெற்கு: முருகேசு இராமலிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்களும் சித்திர வேலாயுத சுவாமி கோவிலுக்குரிய வாதனங்களும். இவ்வெல்லைக்குட்பட்ட வயல் நிலம் அடங்கலும்.
1201

## கார் விபத்தில் வயோதிபர் படுகாயம்

[கொக்குவில்]
யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார் ஒன்றினால் மோதுண்ட வயோதிபர் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து நேற்றுமுன்தினம் சிவலிங்கப்புளியடிக் கண்மையில் நடைபெற்றது.

விபத்துக்குள்ளான சின்னையா நல்லதம்பி (வயது 75) என்பவர் வீதியைக்கடக்கும் போதே இவ்விபத்து ஏற்பட்டதாம்

காரினால் மோதுண்ட வயோதிபரை ஆஸ்பத்திரியில் அனுமதித்த கார்ச்சாரதி பொலிசில் சரணடைந்தார்.

கார்ச்சாரதியான இளையதம்பி விக்கினேஸ்வரனை பொலிசார் பிணையில்செல்ல அனுமதித்தனர்.

மேற்படி விசாரணையை யாழ். போக்குவரத்துப்பகுதி பொலிஸ் கான்ஸ்டபிள் ஆர். கோபால் மேற்கொண்டுள்ளார். (உ)

## கடிநாய் தொல்லை

(புலோலி)
புலோலிப்பகுதியில் கடிநாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். இந்நாய்களின் தொல்லையை நீக்குமாறு இப்பகுதி மக்கள் புலோலி கிராமசபை விசேட ஆணையாளரிடம் கோரியுள்ளனர். [உ]

## பின்னுறுதிக் கட்டளை

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்
மயிலிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா அருமை நாயகத்தின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்
முத்தையா அருமை நாயகம் கைம்பெண் திலகவதி, மயிலிட்டி காங்கேசந்துறை
மனுதார்

மரணச்சொத்து
நியாயாதிக்கம்; இல. 28
எதிராக
பராயமற்ற 1. அருமை நாயகம் மகள் அனுராதா.
பராயமற்ற 2. அருமை நாயகம் முரளீதரன்.
பராயமற்ற 3. அருமை நாயகம் மகள் அனுஷா எல்லாரும் பராயமற்றவர்கள் தங்கள் வழக்குப் பாதுகாவலர்.
4. ஐயாத்துரை கணேசலிங்கம் மூலமாக எல்லாரும் மயிலிட்டி காங்கேசன் துறை.
எதிர்வாதிகள்

மேற்படி விஷயம் 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி மல்லாகம்மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்த குமாரசுவாமி முன்னிலையில் மனுதார் சார்பில் சட்டத்தரணி திரு. ஆ. வ. சதாசிவம் அவர்கள் தோற்றி, மனுதாரின் 10-11-78 திகதியிட்ட மனுவும் சத்தியக் கூற்றும் வாசிக்கப்பட்டு மனுவில் உள்ள விடயங்கள் முதற்றோற்றத்தில் நிரூபிக்கப் படக்கூடியன என நீதிமன்றம் திருப்தியடைந்ததன் மேல் பின்வருமாறு கட்டளையிடப்படுகிறது. 1979ம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதிக்கு முன்னர் அக்கறையுள்ள ஆள் எவரேனும் போதிய எதிர்க்காரணம் காட்டினாலன்றி இவ் வழக்கின் நடவடிக்கைகளை கவனிப்பதற்காக பராயமற்ற 1ம், 2ம், 3ம் எதிர்வாதிகளின் வழக்கு நண்பனாக மேற்சொல்லப்பட்ட 4ம் எதிர்வாதி நியமிக்கப்படவேண்டுமெனவும்,

மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மனைவியென்ற முறையில் குறித்த காலஞ்சென்றவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்களுக்கு நிர்வாக அதிகாரத்துவப்பத்திரங்கள் பெ தகுதியுடையவரென்றும் அவ்வாறான நிர்வாக அதிகாரத்துவப் பத்திரங்கள் அப்படியே மனுதாருக்கு வழங்கப்படவேண்டுமெனவும் இத்தால் கட்டளையிடப்படுகிறது

மேலும் மேற்சொல்லப்பட்ட நாளான 1979ம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதியன்று 4ம் எதிர்வாதி பராயமற்ற 1ம், 2ம், 3ம் எதிர்வாதிகளை நீதிமன்றத்தில் வெளிப்படுத்தவேண்டும் எனவும் இத்தால் கட்டளையிடப்படுகிறது

1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி.

எஸ். ஆனந்தக்குமாரசாமி
மாவட்டநீதிபதி
மல்லாகம்

தயாரித்தது
ஆ. வ. சதாசிவம்
மனுதாரின்
பதிவுபெற்ற தரணி,
காங்கேசன்துறை.
1220

## கொங்கிறீட் மின்கம்பங்கள் அமைக்கப்படும்

(மட்டுவில்)
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சகல பனைமரத்தால் ஆக்கப்பட்ட மின்சாரக் கம்பங்களுக்கும் நகரசபை இந்த ஆண்டு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறது.

பனைமரத்தால் ஆக்கப்பட்ட மின்சாரக்கம்பங்களால் அபாயங்களுக்கு இடமேற்படலாம் என்பதால் சகல மரக் கம்பங்களையும் மாற்றிவிட்டு கொங்கிறீட் கம்பங்களை நகரசபை நாட்டப்போகிறது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

ஆனைக்கோட்டை காலஞ்சென்ற வீரேசன் சுந்தரம் பூபாலனின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்
காலஞ்சென்றவர்

வீரேசன் சுந்தரம் பூபாலன் கைம் பெண் தங்கம்மா அல்லது, வள்ளிக்குட்டிக்கு புளியங்கண்டு பிள்ளையார் கோவிலடி ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம்.
மனுதார்

எதிராக
மரணசாதன நியாயாதிக்கம்
T/3401
1 சுந்தரம் பூபாலன் சண்முகம் ஆனந்தன் தனித்தும் பராயமற்ற 5-ம், 6-ம், 7-ம் பிரதிவாதிகளின் சட்டபாது காவலராகவும்,
2. சுந்தரம் பூபாலன் மகள் மீனாட்சி அல்லது மீனாம்பிகை.
3. சுந்தரம் பூபாலன் மகள் கமலாம்பிகை அல்லது கமலாவதி.
4. சுந்தரம் பூபாலன்மகள் அம்பிகை
(பராயமற்றவர்)
5. சுந்தரம் பூபாலன் மகள் தேவகி,
(பராயமற்றவர்)
6. சுந்தரம் பூபாலன் சிவானந்தன்,
(பராயமற்றவர்)
7. சுந்தரம் பூபாலன் மகள் விஷயலட்சுமி எல்லோரும் புளியங்கண்டடி பிள்ளையார் கோவிலடி ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம்
எதிர் மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆந் திகதி 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது தென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றன.

1979-ம் ஆண்டு தை மாதம் 5-ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்.
பதிவாளர்.

தயாரித்தது!
பொ. நவரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.
1257

## ரதோற்சவம்

[சித்தன்கேணி]
சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இன்று காலை ரதோற்சவம் நடைபெறுகிறது.

நாளை அதிகாலை நடேசர் அபிஷேகம் நடைபெறும் [இ]

புதிய கம்பங்களை நாட்டுவது மட்டுமல்ல, புதிய மின்சாரத் தொடர்களையும் அமைக்கப்போவதாகவும் இதற்கு ஒன்றரை லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் விசேட ஆணையாளர் திரு. நவரத்தினராஜா தெரிவித்தார் [உ]


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள வியாபாரப் பிரதிநிதிகள் உடன் தேவை சிங்களம், தமிழ் பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. 12-1-79 வெள்ளிக்கிழமை காலை 9-00 — 10-00மணிக்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். கண்ணு புறடக்ஸ், சுன்னகம். 1270

### பயிற்சி

3 மாத விசேட மின்னியல் டிப்பிளோமா பயிற்சி 12-01-1979 ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு: இன்ஸ்ரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொம் சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1281

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electrcians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் மூதலுதவிப் பயிற்சியும் இலவசம். நாஷனல் இன்ஸ்ரிரியூட்ஸ், 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1291

### சேவை

பத்து வருடங்களுக்கு மேல் கணக்கியல் துறையில் அனுபவமுள்ளவரால் கடைக் கணக்குகள் எழுதிக் கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: 1284, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1284

### விற்பனைக்கு

நாஷனல் பனசோனிக் (National Panasonic) 2இன்1 Compact R S. 4300 F.D S பிந்திய மாடல் இரண்டு ஸ்பீக்கர்களுடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் அரசாங்க நில அளவையாளர், 46, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 1288

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 22-1-79ந் திகதிக்கு முன்னர், பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்,

1. கிளைமுகாமையாளர் தரம் II (அரிசி ஆலை)
தராதரம்: க. பொ. த. (சாதாரண) பத்திரம்.
3 வருட அனுபவமும்
அல்லது
ஜே. எஸ். சி. தராதரப் பத்திரமும், 5 வருட அனுபவமும்.
வயது: 23 — 40
சம்பளம்: நாளொன்றுக்கு 15/- (எல்லாப் படிகளுமுட்பட)

2. அரிசி ஆலை இயந்திரம் இயக்குபவர்
தராதரம்: ஜே. எஸ். சி தாரதரமும் 5 வருட அனுபவமும்.
வயது: 23 — 40
சம்பளம்: நாளொன்றுக்கு ரூபா 13/- (எல்லாப் படிகளுமுட்பட)

பொதுமுகாமையாளர்
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.
திகதி: 8-1-79. 1289

# மக்கள் கருத்து

## யாழ்ப்பாணநகரம்

## அழகும் சுத்தமும்பெற...

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாமென்று பொதுமக்களிடம் கருத்துக்களை விசேஷ ஆணையாளர் திரு. என். சிவஞானம் கேட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அவரது சமீபகாலச் செயல்களைப் பாராட்டுபவர்களும், விமர்சிப்பவர்களும், கண்டிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். மக்களின் கருத்துக்களை அவர் ஏற்று, செய்யவேண்டியவற்றை விரைவில் செயவாரென்று எம் போன்றவர்கள் நம்புகிறார்கள்.

யாழ். மாநகரம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கவேண்டியது மிகமிக அவசியமே. தெருக்கள் செப்பனிடுவதும்விஸ் தரிப்பதும் முக்கியமே. நவீன சந்தையையும், வேறு சில கடைகளையும் கட்டி, அதனால் பெறப்படும் வருவாயை நகரின் அபிவிருத்திக்குச் செலவிட்டுவருவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மின்சாரநிலைய வீதியை எடுத்து, அவ்வீதியில் நான் காணும் சிலவற்றை ஆணையாளர் கவனத்திற்குத் தருகின்றேன்.

மின்சாரநிலைய வீதியில் வடக்குப் பக்கமாக இரு ஒழுங்கைகள் இருக்கின்றன. அந்த ஒழுங்கைகள் இரண்டையும் பற்றி ஆணையாளர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முதலாவது ஒழுங்கை தினமும் அசுத்தம் செய்யப்பட்டு, குப்பைகூழங்களுடன் காட்சிதரும். இரண்டாவது ஒழுங்கை 786, 784, 782 பஸ் தரிப்புநிலையத்திற்கு எதிர்ப்புற ஒழுங்கை எந்த நேரமும் மலசலம் கழிக்கும் இடமாக இருக்கின்றது, இந்த இரண்டாவது ஒழுங்கையில் தனியார் கல்வி நிறுவனங்கள், வேறு பல தொழில் ஸ்தாபனங்கள், சங்க காரியாலயங்கள் இருக்கின்றன. நகரில் மலசலகூடம் இல்லாத குறையை இந்த இரண்டாவது ஒழுங்கை போக்கிவருகின்றது.

பல வீடுகளை உள்ளடக்கிய, பல பொது ஸ்தாபனங்களை உள்ளடக்கிய இந்த இரண்டாவது ஒழுங்கையால் செல்லும் ஒருவர் மூக்கையும் பொத்தி, கண்ணையும் மூடிக்கொண்டே செல்லவேண்டும்.

யாழ். நகரில் முனீஸ்வரன் வீதி ஒழுங்கை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை இவற்றை விட மிகவும் அசுத்தமான ஒழுங்கை இதுதான் என்பதைத் தாங்கள் ஒருமுறை சென்று பார்த்தால் ஏற்றுக்கொள்வீர்கள். இந்த இரு ஒழுங்கைகளுக்குப் பெயர்ப்பலகைகளும் இல்லை.

அடுத்து, 782 பஸ்தரிப்பு நிலையத்திற்குப் பின் பக்கமாக ஒரு நல்ல தண்ணீர்க்கிணறு இருக்கிறது. இக்கிணற்றடி அடைத்துச் சில கடைக்காரர்களால் பாவித்துவரப்பட்டது. தேநீர்க் கடைக்காரர்கள் இதனால் பெரிதும் பயனடைந்தனர். இக்கிணற்றடி சிலவேளை மலசலகூடமாகப் பாவிக்கப்பட்டுவருவதால் அங்கு தண்ணீர் அள்ளச் செல்லமுடியாமலிருக்கின்றது. கிணற்றைச் சுற்றி வேலியடைத்தாலும் சில விஷமிகள் வேலியை அழித்துத் தமது கருமத்தைக் கனகச்சிதமாக முடித்துக்கொள்கின்றனர்.

அதனையடுத்து, பழைய 'பாக்கெயின் செண்ரர்', டால் மற்றும் துணி வகைகள் விற்பனைசெய்யப்பட்ட கட்டிடத்தின் முன் விறுந்தை, சில இளசுகளுக்கு இரவுபகலாகக் கொண்டாட்டத்திற்குக் குறைவில்லாத இடமாக இருக்கின்றது. விலைமாதர்களுக்கு இந்த இடம் பகலிரவாகக் காட்சிதருகின்றது. இம்மண்டபத்தில் ஓர் இளம்பெண் சமைத்துச் சாப்பிட்டுவருவதையும், அவள் இப்போது ஒரு குழந்தையைப் பெற்று, அதிலேயே தாலாட்டி வளர்த்துவருவதையும் காணலாம்.

இந்தக் கட்டிடத்தில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடந்தது இன்று பூட்டப்பட்டுக் கிடக்கின்றது. இரவில் கடைகள் பூட்டப்பட்டதும் விலைமாதர்களும், வெறியரும் இக்கடை வாசல்களில் களியாட்டம் நடாத்துகின்றனர். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இவற்றைப் படம்பிடித்துச் சென்றதையும் நான் பலதடவைகள் கண்டிருக்கிறேன். விலைமாதர்களாலும் காடையர்களாலும் இந்த வீதி, யாழ்நகரின் அழகை முற்றாகக் கெடுத்துள்ளது.

பஸ் நிலையத்தில் ஒரு மலசலகூடம் இருக்கிறது. அது பெயரளவிலேயே இருக்கிறது அங்கு எவரும் சென்று தமது அவசரக் கடன்களைக் கழிக்க முடியாதவாறு இருக்கிறது. யாழ்நகருக்கு வரும் உள்நாட்டவர், வெளிநாட்டவர் மலசலம் கழிக்க எதுவித வசதியுமின்றி அவதிப்படுகின்றனர். பஸ் பிரயாணிகளோ பக்கத்து ஒழுங்கைகளை அவசரத்திற்குப் பாவிக்கின்றனர்.

யாழ்நகரில், ஒரு வீதியில் நூறு யார் தூரத்திலேயே இத்தகைய சீர்கேடுகள் என்றால் மூழு நகரிலும் எப்படியிருக்கும்?

பொலிசாரின் உதவியுடன் விலைமாதர்களையும், காடையர்களையும், பிச்சைக்காரர்களையும் அகற்ற ஆணையாளர் முன்வரவேண்டும்.

அத்துடன் பஸ்நிலையத்திற்கு அண்மையில் வசதிகளைக் கொண்ட மலசலகூடத்தை அமைத்து நகரின் நற்பெயரைக் காப்பாற்றவேண்டும்.

கொழும்பு மாநகரிலுள்ள பஸ்நிலைய மலசலகூடத்தில் ஒருவர் நியமிக்கப்பட்டு அடிக்கடி தண்ணீர் ஊற்றிச் சுத்தம் செய்வதைச் சமீபத்தில் பார்த்தேன்.

யாழ்நகரில் மலசலகூடம் ஒன்றை முதல் வேலையாக நிறுவ ஆணையாளர் முன்வரவேண்டும். அங்கு செல்பவர்களிடம் கட்டணம் அறவிட்டாலும் பரவாயில்லை பொதுமக்கள் அசௌகரியப்படாமலும், நகர சுகாதாரம் பாதிக்கப்படாமலும் இருக்க இந்நடவடிக்கை மிகவும் அவசியமாகும்.

புத்தொளி

அச்சுவேலி.

## தொழிற்சங்கம்

[யாழ்ப்பாணம்]

தகுதிக்கேற்ற தொழிலில்லாது பேருழைப்பைப் பெற்றவரும், அரசாங்க சேவையிலிருந்துவரும் சுமார் 100 பட்டதாரிகள் சேர்ந்து 'கீழ் உழைப்புத் தமிழ்ப் பட்டதாரிகள் சங்கம்' என்ற பெயரில் ஒரு சங்கத்தை நல்லூர் ஸ்தான சி. சி. பாடசாலையில் பொங்கல் திருநாளான ஞாயிறன்று அங்குரார்ப்பணம் செய்யவிருக்கின்றனர்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைச் செயலாளர் திரு. மெற்றுஸ்மயில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (அ)

## ஈழத்துச்சிதம்பரத்தில் இன்று ரதோற்சவம்

# தில்லைக்கூத்தன் திருநடனம் காரைநகரில் கண்டிடுவோம்

- சிற்பி -

இறைவன் இருக்குமிடமெல்லாம் கோவில் என அழைக்கப்பட்டாலும் சைவர்களைப் பொறுத்தவரை 'கோவில்' என்பது தில்லைச் சிதம்பரத்துக் கூத்தப்பிரானின் ஆலயத்தைக் குறிக்கும் தனிச்சிறப்புவாய்ந்த புனிதச்சொல்லாகவும் இருக்கின்றது. "இனிப் பிறவாதிருக்க வேண்டும்; இறைவனின் திருவடிநீழலில் என்றும்இன்பமுடன் இருந்திட வேண்டும்" என மெய்யடியாரெல்லாம் நெஞ்சு நெக்குருகி நிமலனை வேண்ட, அப்பர் பெருமானை 'மனித்தப்பிறவியும்வேண்டும்' எனவேண்டவைத்தவை தில்லை நடராஜனின் குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும், பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுமல்லவா? இத்தகைய அழகுப் பொலிவுடன அருட்பொழிவும் நிறைந்த தில்லைச்சிதம்பரத்தில் திருவெம்பாவை விழாவிற்கும்ஆர்த்திராபிஷேகத்திற்கும் பக்தர்களின் வெள்ளம் பிரவாகித்து ஓடும். உலகெங்கிலும் வாழும் சைவப்பெருமக்களின் சிந்தனையிலே தில்லை நடராஜன் தனிச்செங்கோல் செலுத்தும் திருநாள் திருவாதிரைத் திருநாளாகும் வாழ்க்கையில் ஒருதடவையாவது தில்லைக்குச் சென்று திருவாதிரை விழாவையும் தில்லை நடேசனின் திருநடனத்தையும் காணமாட்டோமா? என ஏக்குவோர் பலர். கடல்கடந்த நாடுகளிலேயுள்ள, குறிப்பாக இலங்கையிலுள்ளசிவனடியார்கள் பலருக்கு இவ்வேக்கம் ஏக்கமாகவே தேங்கிவிடுவதுமுண்டு ஆனால் கருணாமூர்த்தியாகிய கனகசபேசன், கனவிலும் நனவிலும் தன்மேற் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் கணக்கற்ற பக்தர்களைக் கைவிட்டுவிடவில்லை. 'திருக்கைலையை அடைந்தே தீருவேன்' என்ற திடசங்கற்பத்துடன் கல்லையும் முள்ளையும் பொருட்படுத்தாமல் நடந்தும் தவழ்ந்தும் உருண்டும் சென்ற அப்பர் பெருமானுக்கு திருவையாற்றிலே திருக்கைலாசக் காட்சியைக் காட்டியருளிய தியாகேசன், 'திருமணம் காண வந்தோரின் மனம் குளிர மதுரைப் பொற்சபையிலே தன் திருநடனக்காட்சியைக் காட்டியருளிய தில்லைவேந்தன் இலங்கை மக்களுக்குத் தன் இன்னருளைப் பொழியாமலா இருக்கின்றான்?

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்பால் அமைந்துள்ள காரைநகர் எனுந்தீவின் வடபால் உள்ள திண்ணபுரம் என்னுந் திருத்தலத்திலே ஆனந்தத் தாண்டவம் ஆடியபடி அனைவரையும் ஆகர்ஷித்துக் கொண்டிருக்கின்றான் அப்பன். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகைவிசேடங்களும்பொருந்திய உத் திருத்தலம் பூஜாக்கிரமத்திலும் அபிஷேகச் சிறப்பிலும் தில்லைச் சிதம்பரத்தை பின்பற்றுங்காரணத்தால் ஈழத்துச் சிதம்பரம் எனப் பல்லோராலும் போற்றப்படும் பெருமைபெற்றுத் திகழ்கின்றது. இங்கு நடைபெறும் திருவெம்பாவை விழாவிற்குத் தனி மகிமையுண்டு. மூல மூர்த்திகட்கு விசேட அபிஷேகம், பூஜை, மணிவாசகப் பெருமானை நடராஜர் சந்நிதிக்கு எழுந்தருளச்செய்து திருவெம்பாவை ஓதல், சுவாமி வீதியுலா வருதல் ஆகியவை தினமும் நடைபெறும் நிகழ்ச்சிகள். இரவு வேளைகளிலும் திருவெம்பாவை ஓதப்படுவது இத்தலத்தில் மட்டும் நிகழும் சிறப்பு நிகழ்ச்சியாகும். ஒன்பதாம் நாளன்று சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரப் பெருமான் தன் பரிவார மூர்த்திகளுடன் பஞ்ச ரதங்களிற்பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. இரதோற்சவம்நிகழ்ந்த பின் அம்மைஅப்பரின் திருவூஞ்சல் நடைபெறும்.

நள்ளிரவு தொடக்கம் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் சௌந்தராம்பிகை அம்பாளுக்கும் அரிஹரபுத்திரர்க்கும் அபிஷேகம் நடைபெறும். வசந்த மண்டபத்திலே நடராஜப் பெருமானுக்கும் சிவகாமி அம்பாளுக்கும் நடைபெறும் ஆர்த்திராபிஷேகத்தைக் காணக் கண்கோடி வேண்டும். இவ்வபிஷேகக் காட்சியைக் காண்பதற்காகவென்றே இலங்கையின் பலபாகங்களிலிருந்தும், மலேஷியா சிங்கப்பூர் போன்ற இடங்களிலிருந்தும் எண்ணற்ற பக்தர்கள் இத்தலத்திற்கு வருவர். அருள் வெள்ளம்பெருகும் இவ்வபிஷேகக் காட்சியிலே தோய்ந்து தோய்ந்து தன்னைமறந்த புலவர்பணி இளமுருகனார் "ஈழத்துச் சிதம்பரபுராணம்" எனும் நூலில் இவ்வாறு கூறுகின்றார்.

வீடுதரக் கூத்தாடு
வித்தகர்க்கு
விழாவெடுத்து விதித்த
வாற்றாற்
பீடு தரு முழுக்காட்டிப்
பிறங்குதிருக்
கோலங்காண்பதுதான்
பேறும்
ஏடு தருங் கமலத்தான்
றந்த விழி
யிரண்டதனை ஏற்கப்
போதா
கூடு தரு மிடமெல்லாங்
கண் பெறினுங்
கூட்டுணல் கூடாதன்றே.

திருவாதிரைத் திருநாளாகிய பத்தாம்நாள் மாலையில் நடைபெறும் திருவூடல் விழாவும் பக்தர்களைப் பரவசப்படுத்தும் பெருவிழாவாகும்.

தன் எல்லையில்லாக் கருணையினால் ஆன்ம கோடிகளின் தொல்லைவினை தீர்த்தருளும் தில்லை நடராஜன் எம்மனோர்க்கும் நல்லருள் புரிவதற்காக ஈழத்துச்சிதம்பரத்திலே எழுந்தருளி எம்மையெல்லாம் அழைக்கின்றான். "அவன் அருளாலே அவன் தாள் பணிவோம்." [அ]

## "நாட்டுப்பற்றுடன்

# அரசாங்க ஊழியர்

## பணியாற்ற வேண்டும்"

### -- யாழ். விசேட ஆணையாளர்

(கொக்குவில்)

"அரசாங்க ஊழியர்கள் ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றுடன் சேவையாற்றினாலே நாடு முன்னேறும்" என்று தட்டாதெரு உபமின்நிலையத்தினரின் ஒளிவிழாவில் உரையாற்றுகையில் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் கூறினார்.

இவ் விழா தட்டாதெரு பூங்காவிலுள்ள திறந்தவெளி அரங்கில் மின்அத்தியட்சகர் திரு. எஸ். சி. நல்லையா தலைமையில் நடைபெற்றது.

ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில், "கடந்தகாலங்களில் மாநகரசபை ஊழியர்கள் தம்மோடு ஒத்துழைத்ததற்கு நன்றி கூறினார்.

"தொடர்ந்தும் ஊழியர்கள் ஒத்துழைத்தால மாநகரசபையின் மின்சாரப்பகுதி ஊழியர்களுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

வணபிதா நேசநாயகம் அடிகள், ஆர். விஸ்வநாதன் சட்டத்தரணி ந. சற்குணசிங்கம் மின்நிலைய உத்தியோகத்தர், சாந்தலிங்கம், நில அளவையாளர் திரு இரத்தினசிங்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ)

## மூதூர்ப்பகுதி ஆசிரியருக்கு இப்படியும் ஒரு சோதனை

[நமது மூதூர் நிருபர்]

சூறாவளியினாலும் வெள்ளப் பெருக்காலும் பாதிக்கப்பட்ட மூதூர்ப் பகுதி ஆசிரியர்களுக்கு, நிவாரண முற்பணம் பெறுவதற்கான அறிவித்தல் கிடைத்ததும் அதைப் பெற்றுக் கொள்வதற்கு மூதூர் தபால் நிலையத்தில் பணம் இல்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த பல நாட்களாக நிவாரண முற்பணம் தங்களுக்குக் கிடைக்காதா என்று எதிர்பார்த்திருந்த ஆசிரியர் கடந்த 3-ம் திகதி தங்களின் முற்பணக்காசோலைகளை பெற்றுக் கொண்டனர். ஆனால் இவற்றை மாற்றிக் கொள்ள மூதூர்த் தபால் நிலையத்தில் பணம் இல்லையாம்.

இதுபற்றி நமது நிருபர் விசாரித்த போது மூதூர்த் தபால் நிலையத்தில் வருவாய் மிகக் குறைவு என்றும் இதனால் இப்படியான ஓர் பெருந்தொகைப் பணம் மூதூர்த் தபால் நிலைய இருப்பில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே போல் ஆசிரியர்களின் கடந்தமாதச் சம்பளமும் மிகவும் தாமதமாகவே வழங்கப்பட்டது.

## பன்குளத்திற்கு நவீன சந்தை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பன்குளம் பகுதிக்கு நவீனசந்தை ஒன்றை நிறுவுவதற்காக 25 ஆயிரம் ரூபா செலவிடப்படவுள்ளது. இதனால் பன்குளத்திலுள்ள 5000 மக்கள் நன்மை அடைவார்கள்.

நவீன சந்தையை நிறுவுவதற்காக ஒரு ஏக்கர் காணியைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. [கே-உ]

# கறுப்புக் கொடி போராட்டம் கைவிடப்பட்டது

சென்னை, ஜன. 10 இந்தியப்பிரதமர் மொரார்ஜி தேசாய் இம்மாதம் 18-ம் திகதி தமிழ்நாட்டுக்கு வரும் போது சென்னையில் கறுப்புக் கொடி காட்டுவது என்றயோசனையை இந்திரா காங்கிரஸ் கைவிட்டது

திருமதி இந்திராகாந்தியின் ஆலோசனையை அடுத்தே கறுப்புக்கொடி காட்டும் தீர்மானம் கைவிடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது

தமிழ்நாடு ஜனதா கட்சியினர் இதுகுறித்து திருமதி காந்தியிடம் கேட்டபோது கறுப்புக்கொடி காட்டுவது அவசியமற்றது என்று அவர் கூறினார். [இ]



வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டு விசுவலிங்க மகாகணபதிப்பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் கதை 21 நாட்களிலும் ''விநாயகர் மகத்துவமும் கந்தன் கருணையும்'' பற்றித் தொடர்ந்து சங்கீத கதாப்பிரசங்கம் செய்த நல்லை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசாரிய சுவாமிகளின் பிரதம சிஷ்யர் பிரம்மஸ்ரீ ஐ. நித்தியானந்த சர்மா இறுதி நாளன்று கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்களில் வைபவத்தில் கூடியிருந்த பக்தர்களின் ஒரு பகுதியுடன் கௌரவிக்கப்பட்ட ஸ்ரீ சர்மாவுடன் முக வீணை வாசித்த திரு. வி. எஸ். ஆறுமுகம்பிள்ளையும் மிருதங்கம் வாசித்த திரு. கணபதியாபிள்ளையும் காணப்படுகின்றனர்.

## இந்திராவை விசாரிக்க விசேட நீதிமன்றம்

### விரைவில் சட்டம்வரும்

புதுடில்லி, ஜன. 10 நெருக்கடிகால அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்பாக திருமதி காந்திமீதும் அவரது சகாக்கள்மீதும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட நீதிமன்றங்களை அமைக்க வழிசெய்யும் சட்டமூலம் ஒன்று லோகசபையில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று இந்திய மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லோகசபையின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் போது இச்சட்டமூலம் தாக்கல் செய்யப்படும். இந்திய சுப்ரீம்கோர்ட்டின் ஆலோசனைக்கு அமையவே இச்சட்டமூலம் தாக்கல்செய்யப்பட உள்ளது. (இ)

அமெரிக்க ஆலோசனையின்பேரில்

## மன்னர் ஷா சிலகாலம் வெளிநாட்டில் தங்குவார்

### பிரதமர் பக்தியா தகவல்

தெஹ்ரான், ஜன. 10 ஈரானிய மன்னர் ஷா சிலகாலம் வெளிநாடுகளில் தங்கியிருப்பார் என்றும் அக்காலப் பகுதியில் அரசு நிர்வாகத்தை புதிதாக அமைக்கப்படவுள்ள அரசு சபை ஒன்று கவனித்து வரும் என்றும் புதிய பிரதமர் டாக்டர் பக்தியா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஆலோசனையின் பேரிலேயே மன்னர் ஷா அங்கு செல்லவிருக்கிறார் என்றும் டாக்டர் பக்தியா தெரிவித்தார்.

இதே வேளையில் மன்னர் ஷா அமெரிக்காவில் தங்க விரும்பினால் அவருக்கு விசேட அனுமதி அளிக்க அமெரிக்க அரசு தயாராகவுள்ளது என்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது

இதே சமயம் மன்னர் ஷா ஈரானில் உள்ள தமது சொத்துக்களில் சுமார் ஒரு கோடி பெறுமதியானவற்றை அமெரிக்க வங்கிகளுக்கு மாற்றி உள்ளார். என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

கூட்டுத் தயாரிப்பு:

## 'அமுதும்தேனும்' படப்பிடிப்பு இலங்கையில் ஆரம்பமாகும்

[வெள்ளவத்தை]

'டைலட் பிரேம்நாத்' பச்சைக்கொடி காட்டியதற்குப் பிறகு மற்றுமொரு கூட்டுத் தயாரிப்பு ஜனவரியில் உருவாகின்றது

கடந்த 25 வருடங்களாக தமிழகத்தின் புகழ்பெற்ற ஒப்பனைக் கலைஞரும் நாட்டியப் பேரொளி நடிகை பத்மினி, நாட்டியத்தாரகை வைஜந்தி மாலா, கவர்ச்சி நடிகை ராஜஸ்ரீ ஆகியோருடைய ஒப்பனையாளருமான திரு நாஞ்சில், சிவராம், செல்லையா, இராஜதுரை ஆகியோர் கூட்டுத் தயாரிப்பில் மைதிலி பிக்சர்ஸ் என்ற பெயரில் 'அமுதும் தேனும்' என்ற கலர் தமிழ் திரைப்படம் உருவாகிறது

மேற்படி திரைப்படத்திற்கான ஆரம்ப பூஜை சென்ற மாதம் 14ம் திகதி சென்னை முருகன் மூவிடோனில் (மெஜஸ்டிக் ஸ்ருடியோ) காலை நடைபெற்றது

'அமுதும் தேனும்' என்ற திரைப்படத்தில் ஆரம்ப படப்பிடிப்பு வத்தளை விஜயா ஸ்டூடியோவில் ஆரம்பமாகவிருக்கின்றது.

இந்தத் திரைப்படத்தில் இந்திய நடிகர்களாக ஜெயப்பிரகாஷ், சுருளி ராஜன், துரை காந்த், நடிகை காஞ்சனா, கவிதா, அம்முகுட்டி, புஷ்பமாலா, இலங்கையைச் சேர்ந்த நடிகர்களான விஜய ரட்ண, சந்திரகலா, ஹெலன் குமாரி, உதயகுமார், எம். ஏ. ஆர். பெர்னாண்டோ பலரும் பலர் நடிக்கின்றனர்.

காமிராவை இந்தியாவைச் சேர்ந்த புருஷோத்தமன், இலங்கையைச் சேர்ந்த வினி டி. சொஸதா, இசையை சிதம்பர ராஜா [இந்தியா], நேசன் [இலங்கை], நடனம்: சின்னி டைரக்ஷன்: டி. வி நாயுடு. என். பி. சிவராம் ஆகியோர் ஏற்றுள்ளனர்.

அமுதும் தேனும் கதை வசனத்தை முருகேசன், மோகன் ராஜ் எழுதியுள்ளனர். [உ]

## வேலைவங்கிக்குபுறம்பாக 94 ஆசிரியர் நியமனம்!

### வவனியா எம். பி. கண்டனம்

(வவனியா)

''வவனியா மாவட்டத்தில், வேலை வங்கிப் படிவங்களுக்குப் புறம்பாக, கடந்த இருமாதங்களில் 94 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்''

கூழாங்குளத்தில் பெற்றோரின் சுயமுயற்சியால் நிறுவப்பட இருக்கும்பாடசாலை அடிக்கல் நாட்டுவிழாவில் வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது;-

''கல்வி அமைச்சின் பின்கதவு தன்னிச்சையாக ஆசிரிய நியமனங்களை வாரிவழங்குகின்றது. அதேவேளை முன்கதவு ஆசிரியநியமனத்தின் கல்வித் தகைமை - தொழில்வங்கி இவைபற்றி இடையிடையே அறிக்கைவிடுகின்றது.

''வவனியா மாவட்டத்தை பொறுத்தவரை தகுதியுள்ள ஆயிரம் இளைஞர்களும், யுவதிகளும் தொழில்வங்கி விண்ணப்பப்பத்திரங்களை நிரப்பிக் கொடுத்து, வவனியாதொழில் வங்கி சென்ற அக்டோபர் மாதம் தொடங்கி இயங்குகின்றது.

''கடந்த இரு மாதங்களினுள் தொழில் வங்கியுடன் எந்தவித தொடர்புமின்றி தனிப்பட்ட விண்ணப்பங்கள் எதுவேனும் கோராது, வவனியா மாவட்டத்தில் மாத்திரம் க. பொ. த [சாதாரணம்] கல்வித்தகைமையுடன்35தமிழ் ஆசிரியர்களும், இரு முஸ்லிம் ஆசிரியர்களும், 57 சிங்கள ஆசிரியர்களும் நியமனம் பெற்றுள்ளார்கள்.

''ஜனவரி மாதம் 6, 10ம் திகதிகளில்கூட ஆசிரிய நியமனத்திற்கு நேர்முகப்பரீட்சை நடைபெற்றது. முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பலர் இவ்விதமான ஆசிரிய நியமனங்கள்பெற்றுள்ளார்கள் திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை 50க்கு மேற்பட்டவர்கள் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளார்கள்.

''குறித்த ஆசிரிய நியமனங்கள் அரசாங்கத்தின்கொள்கைகளுக்கும் திட்டமிடல் அமைச்சின் சுற்றுநிருபங்களுக்கும்முரணாக நடைபெறுகின்றது என்பதை மாட்சிமை தங்கிய ஜனாதிபதிக்கும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். தொழில்வங்கிகளும் சுற்றுநிருபங்களும் பத்திரிகைச்செய்திகளும் எமது பிரதேசங்களைப் பொறுத்தவரை கேலிக் கூத்தாகவும், கண்துடைப்பாகவும் மாறியுள்ளது''

## கீரிமலை சிவநெறிக்கழக பொங்கல்விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவநெறிக்கழகம் பொங்கல்விழாவைச் சிறப்புடன் கொண்டாடவிருக்கிறது.

இவ் விழாவில் கழக உபதலைவர் பண்டிதர் இ நமசிவாயம் சமாதானநீதவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளதைப் பாராட்டுதலும் பண்டிதர் மு கந்தையா எழுதிய ''சித்தாந்த செழும்புதையல்'' நூல் அறிமுகவிழாவும் இவ் விழாவில் 'சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

சமாதானநீதிபதியை பண்டிதர் சி. அப்புத்துரை, கவிஞர் வி கந்தவனம், திரு. பி கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பாராட்டி உரை நிகழ்த்துவர்.

நூல் அறிமுகத்தை திரு. வி. சங்கரப்பிள்ளை, திரு என். சுப்பிரமணியம், பண்டிதர் வித்துவான் இ. திருநாவுக்கரசு ஆகியோர் செய்வர்.

### சிறப்புச் சொற்பொழிவு

எதிர்வரும் 21ம் திகதி பிற்பகல் பேராசிரியர் கலாநிதி கைலாசநாதக் குருக்கள் ''சைவக்கோயிற் கிரியைகள்'' என்னும் விடயம்பற்றி இங்கு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (உ)

## பாடசாலை அபிவிருத்தி

(திருகோணமலை)

மன்னார் மாவட்ட அமைச்சரும் மூதூர்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். இ. எச். மஹ்ரூப் சிபார்சினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் மூதூர்த் தொகுதியில் புதிய பாடசாலைக் கட்டிடங்கள் கட்டுவதற்கென இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

சாலியபுரி சிங்கள மஹா வித்தியாலயத்திலும் மூதூர் சிங்கள மகாவித்தியாலயத்திலும் மல்லிகைத்தீவு அரசினர் பாடசாலையிக்கும் புதிய கட்டிடங்களைக் கட்டிமுடிப்பதற்கான வேலைகளுக்கென முறையே 48 ஆயிரம் ரூபா 36 ஆயிரம் ரூபா 36 ஆயிரம் ரூபா தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

## 188 படகுகள் கரைதிரும்பவில்லை

(திருவனந்தபுரம்)

கேரள கடற்கரையிலிருந்து கடந்த 2 நாட்களுக்கு முன்னர் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 200 படகுகளில் 188 படகுகள் இன்னும் கரை திரும்பவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படகுகளில் சுமார் ஆயிரம் பேர் வரை மீன் பிடிக்கச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. தேடுதல் நடைபெறுகிறது

## திருமலை வீதி திருத்தம்: ரூ. 3 லட்சம் ஒதுக்கீடு

(திருகோணமலை)

பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் திருகோணமலை வீதிகளின் அபிவிருத்திக்கென 3 லட்சம் ரூபா திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு இரா. சம்பந்தனின் சிபாரிசின் பேரில் ஒதுக்கப்பட்டுள்ளது.

சல்லி-மாங்கனாய் வீதிக்காகவும் 1 லட்சம் ரூபா மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது இவ் வீதி திருகோணமலை பிரதேச உதவி அரசாங்க அதிபரின் பிரிவின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது இவ்வீதியைத்திருத்துவதனால், இவ்வூர் வாசிகள் 5000 பேர் நன்மை- அடைவர் எனத் தெரிவிக்கப்பட்டது (கே-உ)

## தீட்சை ஏற்பாடு

(சுழிபுரம்)

வழக்கம்பரை சனசமூக பஜனைச்சபையினர் இம்மாதக் கடைசியில் சமய தீட்சை வைக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்

கரணவாய்க் குருக்கள் ஒருவர் மூலம் இத்தீட்சை நடைபெறவுள்ளது தீட்சைவைக்க விரும்புவோர் நிலையச்செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மடுவக்குள அபிவிருத்தி:

# திருமலை எம்.பி. இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு

(திருகோணமலை)

குச்சவெளியிலுள்ள மடுவக்குள அபிவிருத்தி வேலைகளுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரா. சம்பந்தர் இரண்டு லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இதன் வேலைகள் முடிந்தபின், இதுவரை காலமும் நீர்ப்பாசன வசதியைப் பெற்று வரும் காணிகளைவிட மேலதிகமாக 188 ஏக்கர் காணிகள் நீர்ப்பாசன வசதியைப் பெறவுள்ளன.

குச்சவெளிப் பகுதியிலுள்ள இலுப்பைக்குளமும், சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் திருத்தப்படவுள்ளன. இலுப்பைக்குள திருத்தவேலைகளுக்கென முப்பதாயிரம் ரூபாவும், சிறிய குளங்களுக்காக இருபத்தையாயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(கே-உ)

# ஏற்புவலிக்குப் பெண் பலி!

## நோயாளர் அசட்டை குறித்து அதிகாரி கவலை

[கொக்குவில்]

மா இடித்துக்கொண்டிருந்தபோது உலக்கை நெற்றியில் பட்டதால் உண்டான காயத்தினால் பெண் ஒருவர் மரணமானார்.

தெல்லிப்பளையிலுள்ள கல்லுப்பிடுங்கி என்னும் கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சரஸ்வதி (வயது 42) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் நடைபெற்ற மரண விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாவது:- இப்பெண் மா இடித்துக்கொண்டிருக்கையில் இவரின் தலையில் உலக்கை பட்டபோது அதிலிருந்த ஒரு சிறும்பு அப்பெண்ணின் நெற்றியில் ஏறியதால் உடனே அச்சிறும்பை எடுத்துவிட்டு மரமஞ்சள் அவித்துக் குடித்ததாகவும் அதன்பின் காயம் சுகமாகிவிட்டதாகவும், இறந்தவர் கடந்த செவ்வாய்க்கிழமை அயலில் உள்ள மரணவீடு ஒன்றிற்குச் சென்றுவிட்டுவந்து குளித்தார் என்றும் அதன்பின் அவர் கடும் வருத்தத்திற்குள்ளானார் என்றும் வருத்தத்திற்குள்ளான அப்பெண்ணை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அனுமதித்தபோது அங்கு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. பிரான்சிஸ் ஏற்பினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கிவிட்டு, இப்பரிதாப மரணத்திற்குக் காரணம் அவரின் கவலையீனம் என்றும் உலக்கை நெற்றியில் இடித்த உடனே, மரமஞ்சள் குடித்ததற்குப் பதிலாக ஏற்புத்தடுப்பூசி போட்டிருந்தால், இப்பெண்ணை மரணத்திலிருந்து காப்பாற்றியிருக்கலாம் என்றும், இப்படிப் பலர் ஏற்புவலிக்கு ஆளாகி மரணமாகியுள்ளார்கள் என்றும், இனி மேலாவது மரமஞ்சள் அவித்துக் குடிப்பதற்குப் பதிலாக ஏற்புத்தடுப்பு ஊசியைப் போட முன்வரவேண்டும் என்றும் தெரிவித்தார். (உ)

திருட்டுச்சைக்கிள் மீட்பு:

# அடையாளம் காண "ஈழநாடு" செய்தி உதவியது

(கொக்குவில்)

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற சைக்கிள் திருட்டுகள் சம்பந்தமாக யாழ். பொலிஸார் நாற்பதுக்கும் அதிகமான சைக்கிள்களை மீட்டுள்ளதுடன் சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஆ. பாலசுப்பிரமணியம், மல்லாகத்தைச் சேர்ந்த கா. சிவநேசன் ஆகியோரைச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர்.

இது சம்பந்தமாக இன்னும் ஒரு சந்தேகநபரையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

இதுவரை பொலிசாரால் கைப்பற்றப்பட்ட சயிக்கிள்களில் 26 சயிக்கிள்களின் விபரங்களும் இலக்கங்களும் 'ஈழநாட்டி'ல் வெளியாகியதைத் தொடர்ந்து 15 சயிக்கிள் வரை அடையாளம் காட்டப்பட்டுள்ளன எனப் பொலிசார் தெரிவித்தனர்.

இதுவரை அடையாளம் காட்டப்பட்ட சைக்கிள்களில் ஒன்றை மட்டக்களப்புப் பொலிசாரும், இரண்டைச் சாவகச்சேரிப் பொலிசாரும் அடையாளம் காட்டிப் பெற்றுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை பொலிசாரால் மீட்கப்பட்டுள்ள ஏனைய சைக்கிள்களின் விபரம் வருமாறு:

றலி; ஈ. ரீ. 2794, டி. எல். 78717, ஏ வி. 59179, பி. ஏ. 59073, ஈ. கியூ 1006, எவ். எஸ் 227, எச் சி 9646, சி. எம் 299, சி. வை 351, எவ். ஏ 3393, டி 145211, டி. எல் 41556, 71 ஈ. 793, ஈ கியூ 506, ஈ 2555, டி. எல் 53802 டி. ஐ 45208, பி. டி 23417, சி ஓ 2687.

ரூம்: 75 சீ 1888, 75 ஈ 445, 70 ஏ 442.

ரேட்மாஸ்டர்: டி ரி 6333

சைக்கிள்களைப் பறிகொடுத்தோர் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸ் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. பீரிஸ் ஜெயவர்த்தனாவுடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (உ)

# ரயில்சேவை சீரடையும்

(கொழும்பு)

ரயில்வே பகுதி கடந்தகாலத்தில் 510 ரயில்களை சேவையிலீடுபடுத்த 111 ரயில் என்ஜின்களை மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளது.

இத்தகவலை போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமட் தெரிவித்தார்.

தற்போது 150 என்ஜின்கள் கைவசமுள்ள போதிலும், அநேகமானவை பழுதடைந்தவையாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

என்ஜின்களின் பற்றுக்குறையைப் போக்குவதற்கு 32 என்ஜின்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய ஆடர் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

புதிய என்ஜின்களும் பெட்டிகளும் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டதும் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் ரயில் சேவை சீரடைந்துவிடும் என்றும் அவர் கூறினார். (இ)

இயற்கை விஞ்ஞான

# மாணவர் மன்ற முதற் கூட்டம்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தனித்துவமான பல்கலைக்கழகமானதற்குப் பின்னர் முதற்தடவையாக இயற்கை விஞ்ஞானபீட மாணவர்களின் இயற்கை விஞ்ஞான மன்றம் கூட்டப்பட்டது.

முன்னைய நிர்வாகசபை உறுப்பினர்களில் ஒருவரான பத்திராதிபர் திரு. சிவராஜசிங்கத்தின் மறைவுக்கு இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு நடைபெற்றது. இதில் தலைவர் பதவிக்கே போட்டி காணப்பட்டது. இக்கூட்டத்தில் தலைவராக திரு. த. தியாகலிங்கமும், செயலாளராக திரு. ஆர். டி. பொஸ்கோவும், இளம் பொருளாளராக எஸ். ஈ. தர்மர் சவரிமுத்துவும், பத்திராதிபர்களாக திரு. பி. இ. ஜே. யோகராஜா, செல்வி சிவாம்பிகை சுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டதுடன் மொத்தம் பத்துப் பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது.

புதிய தலைவர் தமது உரையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தாவரவியல், விலங்கியல் தவிர்ந்த மற்றைய பாடங்கள் யாவற்றிலும் சிறப்புப் பட்டப்படிப்புப் படிக்க வசதிகள் இருக்கின்றன. ஆனால் தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில்மட்டும் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொள்ளமுடியாமல் இருக்கின்றது. ஆகையால் மாணவர்கள் இப்பாடங்களில் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வெகுவிரைவில் எடுக்கவேண்டும்'' எனக் குறிப்பிட்டார். (உ)

# 39-வது ஆண்டு நிறைவுவிழா

[யாழ்ப்பாணம்]

பன்னாலை இளைஞர் திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் 39வது ஆண்டுப் பூர்த்தி விழா நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

சிவபூதராயர் ஆலயத்தில் திரு. கா. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, திரு வி. சங்கரப்பிள்ளை, செல்வி ஆறுமுகம் வனஜா ஆகியோர் உரையாற்றுவர் திரு சி. சிவபாலசுப்பிரமணியம் வரவேற்புரையும் திரு ச. சந்திரசேகரன் நன்றியுரையும் வழங்குவர்.

பின்னர் அடியார் திருமடத்திலிருந்து மாணிக்கவாசக சுவாமிகள், திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும் இடத்திற்கு எழுந்தருளுவார். [அ]

# உள்ளூராட்சிமன்ற உதவிஆணையாளர் இடமாற்றங்கள்

[திருகோணமலை]

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளராக திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவியாணையாளர் திரு. பேட்ரம் காசிநாதர் ஜனவரி 15 முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்திற்கு வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். தியாகலிங்கம் ஜனவரி 15 முதல் பதவியேற்பார் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. த. வாமதேவன் ஜனவரி 15 முதல் வவனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [கே-உ]



பல்கன் ஸ்கூட்டர் ஏஜன்ஸி ஸ்தாபனத்தை திறந்து விற்பனையை ஆரம்பித்து வைப்பவர் இலங்கை வங்கி (ஸ்ரான்லிவீதி கிளை) முகாமையாளர் திரு. கனகரத்தினம் அருகில் உரிமையாளர் எம். லாபீர்.

# புலவர்மணி இளமுருகனார் நினைவு நாள் இன்று

தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வர் புலவர்மணி இளமுருகனார் எம்மைவிட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்டன. அவர் தமிழுக்குச் செய்த அரிய பணிகளைத் தமிழுலகம் மறக்கமுடியாது. அவரது நினைவுநாள் இன்று ஈழத்துச்சிதம்பரத்தில் நிகழும் திருவெம்பாவைத் தேர்த்திருநாளாய் அமைவது அவருக்கு நடராஜப்பெருமானிடத்துள்ள பேரன்பையே காட்டுகின்றது. அவர் ஈழத்துச்சிதம்பரபுராணத்தில் திருவெம்பாவை விழாவை மிகச்சிறப்பாகப் பாடியுள்ளார். தேர்த் திருநாளில் ஐந்துதேர்கள் வீதியில் வலம்வரும்காட்சி மிகஅழகானது.

ஒருதேரில் விநாயகப் பெருமான் முழுமுதற்பெருமானோடு முன்னே செல்வர். அதனையடுத்து ஐயனார் ஒரு தேரிற் செல்வார். அதனையடுத்து நடராஜப்பெருமானும் சிவகாமசுந்தரியாரும் தனித்தனி ஒவ்வொரு தேரிற் செல்வார்கள். இதனையடுத்து மணிவாசகப்பெருமான் ஒரு தேரிற்செல்வர். இந்தத் தேரோட்டத்தோடு புலவர்மணியின் பாவோட்டமும் கலந்து படிப்போரைப்பரவசப் படுத்துகின்றது அவரது நினைவு நாளில் அப்பாடல்களைப் படித்துமகிழ்வோமாக.

### ஐந்து தேரும் வீதிவலம் வருதல்

தொல்லை துடைத்தரு ளைங்கரத் தாமணி தம்மோடு
மல்லன் மணித்தொடை மங்கையர் நாயக னோர்தேர் மேல்
அல்ல லறுத்தடி யார்க்கருளையனு மோர் தேர்மேல்
எல்லையி லின்மணி வாசக மீந்தவ ரோர்தேர்மேல்

ஐந்தொழில் நாடக மாடிடு மையனு மோர்தேர்மேல்
பைந்தொடி யாள்சிவ காமசு வுந்தரி யோர்தேர்மேல்
மந்திர நான்மறை செந்தமிழ் மாமறை வானேற
வந்தடி யார்தொழ மாமணி வீதி வலம்வருவார்.

திண்கழித் திண்ண புரத்திறை தேவொடு தேரேறி
விண்கழி கூர்ந்தடி மேன்மிகு பூமழை விட்டார்ப்பக்
கண்க ளிரண்டுமக் காமரு காட்சி கலந்தார்ந்து
மண்களி கூர்ந்திட மாமணிவீதி வலம்வருவார்.

திண்ணபுரச் சிவ திண்ண புரச்சிவ வென்றிந்த
எண்ணுறு மீரெழுத் தேறிய வெட்டெழுத் தேர்தாமம்
பண்ணுறு நாவுரை யன்பர் பயின்று பயின்றேத
மண்ணவர் வாழ்வுற மாமணி வீதி வலம்வருவார்.

### காரைநகரில் கூத்தன் தேர் பவனி

கூத்தன் தேரில் வருகிறான்
கூடிப் பக்தர் வருகிறார்
கூத்தனோடு அருளையும்
கூட இறைவன் இறைக்கிறான்

பெம்மான் காட்சி தருகிறான்
பேரூர் ஒன்றாய்த் திரளவே
அம்மை யப்பனும் கரோகரா
அடியார் கூச்சல் ஒலிக்கவே

பிள்ளையார்பின் முருகனும்
பின்னே ஐயனாருமாய்
தாளமேள சகிதமாய்
தாண்டவனார் வருகிறார்

அருளை சுற்றிப் பொழிகிறார்
அமுத வாரித் தேவனார்
இனியு மென்ன அடியரே
இனித் தமனடயனருக்காகவி [illegible]

— க. ஸ்ரீகரன் —

# திருவெம்பாவை

[சுழிபுரம்]

விகவத்தனை முருகமூர்த்தி கோயிலில் திருவெம்பாவை பஜனை தினமும் நடைபெற்று வருகிறது. [உ]

[illegible]

பெலியத்தைப் பொலிஸ் பகுதியில் வர்த்தகர் ஒருவர் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பாக மூவர் தேடப்படுகின்றனர். [உ]

# "கம்பூச்சியா தேசிய முன்னணிபுரட்சிசபையே கம்போடியாவின்ஒரேஅரசு"

## ரஷ்யத தலைவர்கள் வாழ்த்து

### வியட்நாம், ஹங்கேரி பல்கேரியா ஆகியனவும் புதிய அரசுக்கு அங்கிகாரம்

நாம்பென், ஜன. 10 கம்போடியாவில் தற்போது பதவி ஏற்றுள்ள கம்பூச்சியா தேசிய முன்னணியின் புரட்சிசபை அரசே கம்போடியாவின் ஒரே சட்டபூர்வமான அரசாங்கமாகும்.

இவ்வாறு சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவும், பிரதமர் திரு. கொஸிஜினும் கம்போடிய புரட்சி அரசுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் வியட்நாம், சோவியத் யூனியன், ஜெர்மன் ஜனநாயகச் குடியரசு, பல்கேரியா, கங்கேரி ஆகிய நாடுகள் கம்போடியாவின் புதிய அரசை அங்கீகரித்துள்ளன.

**முதன் முதலில் அங்கிகாரம்**

கம்போடியாவின் புதிய அரசை முதன்முதலில் அங்கீகரித்த நாடு வியட்நாம் ஆகும்.

**வியட்நாமுக்கு அரிசி விற்க ஜப்பான் மறுப்பு**

டோக்கியோ, ஜன. 10 கம்போடிய பிரச்னையில் வியட்நாம் தலையிட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ள ஜப்பான் இனிமேல் வியட்நாமுக்கு தமது நாடு அரிசி விற்பனை செய்யமாட்டாது என்று அறிவித்துள்ளது.

இதே வேளையில் கம்போடியா பிரச்னைக்கு சீனவும் ரஷ்யாவுமே காரணம் என்று அல்பேனியா குற்றம் சுமத்தியுள்ளது. (இ)

# ஐரோப்பிய-சீன ஆயுதவர்த்தகம்

லண்டன், ஜன 10 உயர்தர சீன அதிகாரிகள் முதல் ராணுவ ஜெனரல் களைக் கொண்ட தூது கோஷ்டிகள் ராணுவ ஆயுதங்களை வாங்குவதற்கு பீக்கிங்குக்கும் மேற்கத்திய தலைநகரங்களுக்குமிடையே பறந்த வண்ணமிருக்கின்றன.

பிரிட்டனிலிருந்து "ஹரியா" விமானங்களை வாங்க சீன முடிவு செய்துள்ளது. இவை அதி நவீனமான விமானங்களாகும். பத்திரிகைகள் பிரசுரித்துள்ள தகவலின்படி இப்போர் விமானங்கள் சீன-ரஷ்ய எல்லையில் நிறுத்தப்படும்.

பிரான்சிலும் அநேக நவீன ஆயுதங்களை வாங்க சீன பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறது. இவற்றில் 15,000 "மிலாங்", "ஹொட்" டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், "செஸல்" ஹெலிகொப்டர்கள், லாரிகள், கவச வாகனங்கள், துப்பாக்கிகள் முதலியன அடங்கும் என்று "லா எக்ஸ்பிரஸ்" எழுதுகிறது. ஏவுகணைகள், டார்பிடோ படகுகள், "குரோட்டேல்" ஏவுகணைகள் முதலியவற்றையும் வாங்க சீன உத்தேசித்துள்ளது "மிராஜ் 2000" போர் விமானம் வாங்குவது பற்றியும் பேச்சுவார்த்தை நடந்துள்ளது. "லா எக்ஸ்பிரஸ்" செய்தியின்படி இந்த ஆயுதக் கொள்வனவு 50 கோடி முதல் 90 கோடி டாலர் பெறுமதியானதாய் இருக்கும்.

மேற்கு ஐரோப்பிய ஆயுதங்களை மாதிரியாக வைத்து அவற்றை சீனவிலேயே உற்பத்தி செய்ய பிரிட்டிஷ்-பிரெஞ்சு மற்றும் உற்பத்தியாளர்களின் அனுமதியை சீன பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இரு தொகுதிகளிலும் இந்திராகாங்கிரஸ் வெற்றி

புதுடில்லி, ஜன. 10 ஆந்திரப் பிரதேசத்தில் இரண்டு தொகுதிகளிலும் இடம்பெற்ற இடைத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றது.

சிக்கந்தர்பத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட பி. சிவசங்கர் ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்ட திருமதி லட்சுமி காந்தை 19,945 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார்.

15 பேர் கட்டுப்பணத்தை இழந்தனர். மற்றைய தொகுதியில் இந்திரா காங்

[5ம் பக்கம் பார்க்க]

## சிக்மகளூரில் ஜனதாகட்சி அமோக வெற்றி

சிக்மகளூர், ஜன. 10 கர்நாடக மாநிலத்திலுள்ள சிக்மகளூர் தொகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஜனதாகட்சி 87 வீதமான இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

இத்தகவலை இந்திய கைத்தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸ் தெரிவித்தார். [இ]

## டெலிவிஷனில் சென்னை கிரிக்கட் டெஸ்ட்

சென்னை, ஜன 10 சென்னையில் இம்மாதம் 12ந் திகதி ஆரம்பமாகும் இந்திய மேற்கிந்திய 4வது கிரிக்கெட் டெஸ்ட் நேர்முக வர்ணனை சென்னையிலும் பம்பாயிலும் டெலிவிஷன்மூலம் ஒளிபரப்பப்படும். [த]

## இலவச படக்காட்சி

[சுழிபுரம்]

சுழிபுரம் மேற்கு குன் கிராமமுன்னேற்றச்சங்கத்தினரால் சுழிபுரம் ஐயனை கோயில் வீதியில் இலங்கை தகவல்பகுதியினரின் இலவச படக்காட்சி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குகன் கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர் எஸ். சதாசிவம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். [க]


நீடித்த உழைப்பு சிக்கனம், வர்ணம், வடிவமைப்புக்கு மக்கள் தெரிவுசெய்வது




எப்போதும் கேட்டு வாங்குங் கள் சீபா ரப்பர் செருப்புகள்

ஒரு ஏச்பிரி தயாரிப்பு

# யாழ். லீக்கின் மாபெரும் உதைபந்தாட்ட விழா

(யாழ்ப்பாணம்)
யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ''மாபெரும் உதைபந்தாட்ட விழா'' நடைபெறவுள்ளது.

இப்போட்டியில், கொழும்பு திருமலை, மன்னார், அநுராதபுரம் ஆகிய இடங்களில் இருந்து பிரபல்யம்வாய்ந்த விளையாட்டுக்கழகங்கள்கலந்து கொள்ளுகின்றன. இவைகளுடன் யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் விளையாட்டுக் கழகங்களான நாவாந்துறை சென். மேரிஸ், பாஷையூர் சென். அன்ரனிஸ், குருநகர் பாடும்மீன், யாழ்ப்பாணம் முஸ்லீம்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியனவும் கலந்து கொள்கின்றன,

யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இம்மாதம் 12ம், 13ம், 14ம் 15ம் திகதிகளில் மேற்படி உதைபந்தாட்ட விழா நடைபெறவுள்ளது.

12ம் திகதிப் போட்டியின் முதல் ஆட்டத்தில், மன்னார் மாவட்டத் தெரிவுக்கோஷ்டியும் 1978ம் ஆண்டு யாழ். உதைபந்தாட்ட லீக் சாம்பியனை நாவாந்துறை சென் மேரிஸ் கழகமும் மோதும். 2வது போட்டியில் அநுராதபுரம் ரோஜன் கழகமும், குருநகர் பாடும்மீன் கழகமும் மோதும்.

13ம் திகதி முதல் போட்டியில் பாஷையூர் சென்அன்ரனிஸ் கழகமும் திருமலை ஒலிம்பிக்ஸ் கழகமும் மோதும் 2வது போட்டியில் கொழும்பு கோல்ட்சவுஸ் கோஷ்டியும் யாழ் முஸ்லீம்ஸ் கழகமும் மோதும். 14ம் திகதி அரை இறுதிப் போட்டியும், 15ம் திகதி இறுதிப்போட்டியும் நடைபெறும்.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் ''யாழ் உதைபந்தாட்ட லீக்'' போட்டிக் குழுவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## ''அமரர் நடராஜசுந்தரம் சட்டத்தொழில் கோட்பாடு பேணியவர்'' - நீதிபதி எம். டி. ஜேசுரட்ணம்

(நெல்லியடி)
''தாம் எடுத்துக்கொள்ளும் வழக்கைப்பற்றியும் ஆழ்ந்து சிறந்த ஆதாரங்களுடன் புரிந்து, பின் வாதாடுவது சட்டத்தரணி அமரர் நடராஜசுந்தரத்தின் தனிச்சிறப்பாகும்.''

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதவான் திரு. எம். டி ஜேசுரட்னம் நீதிமன்றத்தில் நடைபெற்ற சட்டத்தரணி ஏ. நடராஜசுந்தரத்தின் இரங்கல் உரை நிகழ்த்துகையில் கூறினார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது!

சட்டத்தொழிலின் உயர் கோட்பாட்டுக்கமைய இவர் வாழ்ந்தார்.

சட்டத்தரணி திரு. ஜெயக்கொடி தெரிவித்ததாவது; 'முயற்சி வெற்றி அளிக்கும் என்பதனை வாழ்க்கையில் நிருபித்துக்காட்டியவர் திரு. நடராஜசுந்தரம், 1938ல் வழக்குரைஞராக சட்டத்துறையில் நுழைந்த அமரர் சிறிதுகாலத்திலேயே வழக்கறிஞராகி வெற்றிக்கு முயற்சி தேவை என்பதனை உணர்த்தினார். சட்டத்தொழிலை திறமையுடனும் நேர்மையுடனும் ஆற்றிய நடா அவர்கள் வழக்குகளை நன்முகப் படித்தும் ஆராய்ந்தும் உரைத்துவந்தார். நீதியுடன் இணைந்தும் தமது கட்சிக்காரருக்கு திருப்தி ஏற்படும் வண்ணமும் செயலாற்றினர்.

இவரது திறமையும் அனுபவமும் காரணமாக இலங்கை சட்டவல்லுனர் கழக உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யவைத்தது' என்றார். [உ]

## பெண் பிரயாணியின் ரூ. 2,400 தங்கச்சங்கிலி ரயிலில் அபேஸ்

(திருகோணமலை)
கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி கடந்த புதன்கிழமை வந்த ரயிலில் பிரயாணஞ்செய்த பொன்னுத்துரை பானுமதி (வயது 18) என்ற பிரயாணியின் தங்கச்சங்கிலி திருடப்பட்டது. இச் சம்பவம் கந்தளாய் புகையிரதநிலையத்தினை அதிகாலையில் வந்து பின்னர் நிலையத்திலிருந்து திருகோணமலை நோக்கி புறப்பட ஆயத்தமாகக் கொண்டிருந்தபோது யாரோ மர்மநபர் ஒருவர் திடீரென ரயிலினுள் பிரவேசித்து மேற்படி பெண்ணின் கழுத்திலிருந்த 2,400 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை இழுத்தறுத்துக் கொண்டு ரயில்வே பிளாட்போம் பக்கமாக ஓடிமறைந்து விட்டாராம்.

இதுபற்றி அப் பிரயாணி திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைதாகவில்லை. புலன்விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## திருமலைக்கு புதிய அலுவலகம்

[திருகோணமலை]
திருகோணமலை மாவட்டத்திற்கு இவ்வருடம்முதல் அலுவல்களை நேரடியாகக் கவனிப்பதற்காக தனியான தபால் அத்தியட்சகர் அலுவலகமொன்று திறக்கப்பட்டுள்ளது திருகோணமலை மாவட்ட தபால்தந்திச் சேர்வேக்களை கவனிக்கும் பொறுப்பை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அலுவலகமே இதுவரைபெற்றிருந்தது.

## சிறைச்சாலையில் நத்தார் விழா

[யாழ்ப்பாணம்]
கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை 12-ம் திகதி மாலை நத்தார் விழா சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறத.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் சிறைச்சாலை ஊழியர்களாலும் கைதிகளாலும் இவ் விழா கொண்டாடப் படவுள்ளது.

புதுவாழ்வு இயக்கத்தின் ஜெப வழிபாட்டுடனும் கோப்பாய் பங்குக்குரவர் திருப்பலிப்பூசையுடனும் விழா ஆரம்பமாகும்.

கலாரசிகன் காவலூர் பீசைமன் தயாரித்து காவலூர் கவிஞர் செல்வராஜாவினல் பாடப்பெற்ற 'ஜெகமீட்பர்' என்னும் நாடகம் கோப்பாய் இளைஞர்களால் நடித்துக் காண்பிக்கப்படும்

யாழ் சிறைச்சாலை அதிபர் திரு எஸ். டி தர்மரத்தினம், கவிஞர் செல்வராஜாவுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதுடன் பொற்கிளியும் வழங்குவார். [உ]

## இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை (11-1-79)

**மேடம்:-** பொதுத்துறையில் நாட்டம் செல்லும். மக்களால் ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு. வெளியூர்ச் செய்தியும் கிடைக்கக்கூடும்.

**இடபம்:-** நம்பிக்கை மூலம் பணமும் பாழாகும். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் போவீர்கள். நெருக்கடியைத் தவிர்க்க மதிவழிநில்.

**மிதுனம்:** நாள் எல்லாம் அலைச்சல் அவசரப் புத்தியினுல் விபரீதங்கள் விளையலாம். பிணிக்கு இடங்கொடாது சுகாதாரத்தைப் பேணி நடக்கவும்.

**கடகம்:-** போதுமென்ற மனமும், புண்ணியவிருப்பும் மேலிடும். பேச்சுவன்மையினுல் பெரும் புகழ் அடைவர். சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

**சிங்கம்:-** வாழ்க்கையில் இருள் மண்டிக்கிடக்கும். ஏமாற்றம் தாக்கும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். பொறுமை நன்று.

**கன்னி:-** தகுதியில் முன்னேற்றமுண்டு. தரமான வாழ்வுமுண்டு. மாதருவழி ஆதரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகனத்தை முதலீடு செய்யவும் சந்தர்ப்பம்கிட்டும்.

**துலாம்:-** நீண்டநாள் பிணி இன்று விடைபெறும். குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும். தெய்வத்தின் துணையுமுண்டு. நல்லநாள்.

**விருச்சிகம்:-** பகைமூட்டம் தென்படும். வெளியிடத்துப் பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம். புதிய முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**தனுசு:-** கவர்ச்சிகரமான தினம். காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். களஸ்திரவழியாலும் சுகம் கிடைக்கும். செல்வாக்குமேலும் சிறப்படையஇடமுண்டு.

**மகரம்:-** பிறர்நம்பிக்கையைத் தவிர்க்கவும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம் சிலருக்கு திடீர்பிரயாணமும் ஏற்படலாம்.

**கும்பம்:-** வெல்லம்போல் இனிக்கும் வாழ்க்கை இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும். எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

**மீனம்:-** கடமையில் மூதவிடம் கிடைக்கும் பதவியில் உயர்வுக்கும் இடமுண்டு. வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## அம்பிகைபாகன் நியமனம்

(யாழ்ப்பாண)
யாழ்ப்பாண பல்கலைக்கழக அதிகார சபை உறுப்பினர்களில் ஒருவராக திரு. எஸ் அம்பிகைபாகன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கைச் சர்வகலாசாலை போர்டிலும் செனட்டிலும் முன்னாள் உறுப்பினராவர் (க-அ)

## இரு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
இரஸ் சார்பில் போட்டியிட்ட திரு நந்தி செல்லையா 74 ஆயிரம் வாக்குகளால் ஜனதா கட்சி வேட்பாளரை தோற்கடித்தார். (இ)

நாகம்ஸ்
(கன்னுகம்)
தினசரி 6-45, 10-0
சனி, ஞாயிறு 2-45
சிவராம் - சந்திரகலா
அநுராகம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
மாணவன்

Rio Daily 10-30, 4-45, 7-00,
(Jaffna) 9-30.
Phone: 7607
TEN-G-MEN

இன்று மட்டும்
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ராமன் தேடிய சீதை
(கலர் - புதிய பிரதி)

வின்ஸர் போன்: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
சிவாஜி--மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

3-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
மற்றும் பலர் நடித்த
உயர்ந்தவர்கள்

இன்று மட்டும்
மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகுமாரி நடித்த
கணவன் மனைவி
13- 1 - 79 முதல்
மூன்று முடிச்சு

REGAL NOW SHOWING
(Jaffna) Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
GREGORY PECK
in
DUEL IN THE SUN
(Cowboy) Color

தினசரி 4 காட்சிகள்
ராணி எஸ் எஸ். ஆர். - ராஜசுலோசனா
(யாழ். நகர்) நடித்த
தைபிறந்தால்வழிபிறக்கும்
(புதிய பிரதி)

SHANTHI JAFFNA. Phone: 7642.
10-30, 2-30, 6-30, 9-45 — 9 — 11
Malini Fonseka...Joe Abeyawickerama in
.. ...LESTER JAMES PERIS......
VEERAPURAN APPU —Cinemascope—
வீரபுரன் அப்பு —சிறந்த சிங்களப்படம்—
அடுத்து வீரமுழக்கமிடும் ''வீரத்திருமகன்''

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ போன் 7695 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ். நகர்) ஆசை அறுபதுநாள்

# ஈழத்துச் சிதம்பர ரதோற்சவம் இன்று

## வானொலியிலும் அஞ்சலாகும்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

இன்று காலை 8 மணிக்கு ஸ்ரீநடராஜப் பெருமானுக்குப் பூஜையும் அதைத்தொடர்ந்து திருவெம்பாவைஓதலும் நடைபெறும், 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 10மணிக்கு ஸ்ரீநடராஜப் பெருமான் அம்பாள் சமேதராய் தமது பரிவாரமூர்த்திகளுடன் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மார்கழிச்செவ்வந்திப் பூக்களால் அலங்கரிக்கப் பெற்ற வெள்ளிச்சாத்துப்படியில் ஈழத்து நாதஸ்வர தவில் வித்துவான்கள் மல்லாரி இராகம் இசைக்க, சங்கநாதம் முழங்க ஆனந்தத் தாண்டவமாடித் தேருக்கு எழுந்தருளுவார்.

பகல் 11-30 மணிக்கு பஞ்சமூர்த்திகள் ஆலயத்தின் மூன்றும் வீதியை வலம்வரும் மாலை 4 மணிக்கு ஸ்ரீநடராஜப்பெருமான் பரிவாரமூர்த்திகளுடன் தேரிலிருந்து இறங்கி ஆலயத்திற்கு எழுந்தருளுவார்.

இரவு 8 மணிக்கு மணிவாசகர் சபை நடாத்தும் மணிவாசகர் விழா சபைத்தலைவர் பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை தலைமையில் திருவாசகத்திருமுறை ஓதலுடன் ஆரம்பமாகும். இவ்விழாவில் "இருபாவைகள்" என்னும்பொருள் பற்றி அருள்மொழியரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதனும் "தொண்டர்தம் பெருமை" என்னும் பொருள்பற்றி தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான் வி. சா. குருசாமிதேசிகரும் சமயச்சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இரவு 12 மணிக்கு தமிழகப் பெரியார் வித்துவான் வி. சா. குருசாமிதேசிகருக்கு பாராட்டு விழாவும், 2 மணிக்கு ஆர்த்திரா அபிஷேகமும் இடம்பெறும்.

அடியார்களின் வசதியை முன்னிட்டு சிவாச்சிரமத்திலும் மணிவாசகர் மடாலயத்திலும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

வெளியூர் அடியார்களுக்கென சகல இடங்களிலுமிருந்து விசேட பஸ் சேவைகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தில் களவுகள், குற்றச் செயல்கள் ஏற்படாவண்ணம் தற்காலிக பொலிஸ்நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

### வானொலி அஞ்சல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ரதோற்சவ நிகழ்ச்சியை இன்று முற்பகல் 10-15 மணி தொடக்கம் நேரடி அஞ்சல் செய்யவிருக்கிறது. [உருத்- நி. உ]

## தமிழக அறிஞருக்கு இன்று பாராட்டு விழா

[யாழ்ப்பாணம்]

ஈழத்துச்சிதம்பர மணிவாசகர் விழாவில் கலந்துகொள்ள வருகை தந்த தமிழ்நாடு தருமையாதீன பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான் வி. சா. குருசாமிதேசிகருக்கு இன்று மணிவாசகர் சபையினர் ஈழத்துச் சிதம்பரத்தில் பாராட்டு வைபவம் ஒன்றை நடாத்துகிறார்கள். [உருத்-நி. உ]

## காட்டில் மர்மச் சடலம்

[கொழும்பு]

கிளிநொச்சிப் பொலிஸ் பகுதிக் காட்டுக்குள் காணப்பட்ட மர்மச்சடலம் ஒன்றையும் பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

இந்த மர்ம ஆண் சடலம் பற்றிய புலன் விசாரணை தொடர்கிறது.

# டைனமைற் வைத்து மீன்பிடித்தாராம்

## மண்டைதீவுவாசி கைது

(கொக்குவில்)

டைனமைற் வெடி வைத்து மீன்பிடிப்பதாகக் கிடைத்த செய்தியைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு விரைந்த பொலிசார் அங்கு 3 பெட்டி நிறைய மீன் வைத்திருந்த ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை மண்டைதீவுச்சந்தியில் நடைபெற்றது.

யாழ் சிறு குற்றத்தடுப்பு பொலிஸ் அதிகாரி திரு திருச்சிற்றம்பலத்திற்குக் கிடைத்த இரகசியத்தகவலை தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிசார், டைனமைற் வைத்துப் பிடிக்கப்பட்டகுமார் 700 ரூபா பெறுமதியான மீனுடன் மண்டைதீவைச் சேர்ந்த சின்னப்பு கந்தசாமி[45 வயது] என்பவரையும் கைதுசெய்துள்ளனர்.

அதேநேரத்தில் வள்ளமொன்றில் மீன்பிடிக்க டைனமைற் வைத்துச்சென்ற ஒருவரைக் கைதுசெய்யச்சென்றபோது சந்தேகநபர் வள்ளத்திலிருந்து குதித்து ஓடிவிட்டதாகவும், மீன்பிடி வள்ளத்தையும் டைனமைற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

சந்தேகநபரைத் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளதாகச் சிறுகுற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி திரு. திருச்சிற்றம்பலம் தெரிவித்தார்.


### விற்பனைக்கு

LAMBRETTA லம்பிறெற்ரு ஸ்கூட்டர்

இத்தாலியில் செய்தது - 150 CC. D. L. மொடல்

தொடர்பு கொள்க:

காந்தளகம்

213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 256



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 11-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice
The Eelanaadu Post Bex No: 49. Telegram: Eelanaadu, Telephone: 389. Registered as a News paper in Sri Lanka.


## தமிழ்க்காங்கிரஸ் வழக்கு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழ்க்காங்கிரஸ் வழக்கு யாழ் மாவட்ட நீதிபதி திரு ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றபோது சட்டத்தரணியும், எதிர்மனுதாரில் ஒருவருமான எம் வே சுப்பிரமணியம் தொகுப்புரை நிகழ்த்தினார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை இதனைத் தொடர்ந்து தொகுப்புரையை ஆரம்பித்தார். விசாரணை இம்மாதம் 19-ந் திகதிக்கு பிலபோடப்பட்டுள்ளது. [ச]

......

குருநகரில்:

## வெடி விபத்து ஒருவர் காயம்

[யாழ்ப்பாணம்]

குருநகரில் நேற்று முன்தினம் நடந்த வெடி விபத்தில் ஜோன்சன் என்பவர் பலத்த காயத்துக்குள்ளானார்.

மயக்கமடைந்த நிலையில் யாழ், பெரியாஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின் வலது கை மோசமான நிலையிலிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

# "அகஇருளகல இறைபக்தி வேண்டும்"

## சுவீடன் பிரதிநிதி பேச்சு

[காரைநகர்]

"மின்சாரக்குமிழ், விளக்கு, மெழுகுவர்த்தி போன்ற செயற்கையானவற்றால் எம்மைச் சூழ்ந்துள்ள பிறஇருளைப் போக்கமுடிகின்றது. ஆனால் எமதுள்ளம் கர்வம், பொறாமை, சுயநலம்போன்ற இருள்களினால் நீடிக்கப்பட்டிருக்கிறது இவற்றைப் போக்க இறைநம்பிக்கை வேண்டும்"

இவ்வாறு வலந்தலை நல்லொழுக்க வாலிபர் இயக்கத்தினரால் காரைநகர் கிழக்கு அமெரிக்கன்மிஷன் பாடசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்ட விழா ஒன்றில் சுவீடன் நல்லொழுக்க வாலிபர் இயக்கப் பிரதிநிதியான திரு பி அண்டர்சன் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: சிறுவர்களை முக்கியமாக நான் குறிப்பிட்ட தீயகுணங்கள் பிடிக்காது பாதுகாக்கவேண்டும் அதற்கு கல்வியறிவும் மிகவும் அவசியமானது. வலந்தலை மக்களைப் பொறுத்தவரையில் இங்குள்ளவர்களின் கல்வியறிவு பற்றி கவலைப்படத்தேவையில்லை. இவர்கள் தங்கள் சிறுவர்கள் கல்வியறிவு பெறுவதில் நன்கு சிரத்தை கொண்டுள்ளார்கள் என்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்" என்றார்.

இவ் விழாவிற்கு இயக்கத்தின தலைவர் திரு வே. பத்மநாதன் தலைமைதாங்கினார் விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இவ்விழாவை காரைநகர் கிறிஸ்தவ தேவாலய மதகுரு உபாகத்தர்த்துரிய எஸ் பீ ஜெயசிங்கம் ஆரம்பித்துவைத்தார். ஈற்றில் பொருளாளர் திரு வ பெஞ்சமின் நன்றியுரை நிகழ்த்தினார். [உ]

## சிங்கப்பூர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யோகேஸ்வரன் சிங்கப்பூரிலுள்ள தமிழர் சீர்திருத்தச் சங்கத்துக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள ஒரு தந்திச்செய்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து வேலைவாய்ப்புத்தேடிவந்துள்ள இளைஞர்களுக்கு ஆதரவளித்து இயன்றஅளவு உதவிபுரியுமாறு கேட்டுள்ளார்.

# கிளிநொச்சிக்கு ஒரு மகளிர் கல்லூரி!

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி சென்திரேசா மகாவித்தியாலயம், இம்மாதம் முதல் மகளிர் மகாவித்தியாலயமாக தரம்உயர்த்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி இவ்வித்தியாலயத்திற்கு 3 லட்சம் ரூபா ஒதுக்குவதாக உறுதியளித்துள்ளார்.

இவ்வருடம் அவர் 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

செல்வி ராதா சோமசுந்தரம் தொடர்ந்து இவ்வித்தியாலய அதிபராக கடமையாற்றுவார் கிளிநொச்சி தொகுதியிலுள்ள மாணவிகள் இம்மாதம் 8ம் தேதி முதல் அனுமதிக்கப்பட்டுவருகிறார்கள். (க)

## புங்குடுதீவில் திருவாசகவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு சிவன் கோவிலில் திருவாசகவிழா எதிர்வரும் 12-ம் திகதி நடைபெறவிருக்கிறது. பேராசிரியர் சி சதாசிவம் பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது.

திருவாசகப் பேருரைகள் திருவாசகக் கச்சேரி என்பன சிறப்புநிகழ்ச்சிகளாக இடம் பெறும்.

பிரம்மஸ்ரீ ஸ்ரீ நிவாச நாகேந்திர சிவாச்சாரியார் தொடக்கவுரை நிகழ்த்துவார் வித்துவான் பொன் அ· கனகசபை பண்டிதர் சி. சரவணமுத்து க. வே. க. நாகலிங்கம் பிள்ளை நா. கார்த்திகேசு சி. க. நாகலிங்கம் சி. மாணிக்கம் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் பேருரை நிகழ்த்துவர்.

வீரமலை நாகேஸ்வரன் கோவிலில் இருந்து திருவாசக ஏட்டுச்சுவடி அடியார்கள் புடைசூழ பிரதான வீதிவழியாக சிவன் கோவில் விழா மண்டபத்திற்கு எடுத்துவரப்படும் இந்த ஊர்வலத்தின் போது சேரும் உண்டியல் பணம் கிழக்கிலங்கை சூறாவளி நிதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக விழாக்குழு தெரிவித்துள்ளது. (உ)

## ஒளி விழா

(உடுப்பிட்டி)

புலோலிப்பகுதி கத்தோலிக்க மக்களாலும் இளைஞர்களாலும் ஒழுங்குசெய்யப்பட்ட "ஒளி விழா" புலோலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் கொண்டாடப்பட்டது

இவ்விழாவிற்கு பருத்தித்துறைப் பங்குக் கட்டளைக் குருவர் அருட்திரு ரெஜி ராஜேஸ்வரன் தலைமை வகித்தார். விழாமுடிவில் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [உ]

## இன்று யாழ்ப்பாணத்தில் குருசாமிதேசிகர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஸ்ரீவிசுவலிங்க மகாகணபதி கோயில் (பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயில்) திருவாதிரை விழாவில் இன்று மாலை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமிதேசிகர் 'கண்ணப்பர்' என்னும் பொருள்பற்றி சிறப்புரை யாற்றுவார். [கெ]

## இரு கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

கொடுபிடியிலிருந்து எம்மை நாம் காப்பாற்ற வேண்டுமானால், அவசியம் எமக்கென ஒரு தனித் தமிழ் ராச்சியம் அமைக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பேசப்பட்ட தமிழர்களின் பெருமையைக் கேட்கவந்த தமிழ்மக்கள் மீது பொலிசார் செய்த அட்டூழியத்தைதமிழர்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

அதனால்தான் தமிழ்மக்களின் உள்ளத்தில் தனித் தமிழீழக் கோரிக்கை எழுந்தது அக் கொள்கையின்படி தமிழீழப் போராட்டத்தை நாம் நடாத்திவருகிறோம்.

இந்நாட்டிலுள்ள அரசாங்கங்கள் மாறலாம், அவர்களின் கொள்கைகளும் மாறலாம் ஆனால் பொலிசாரினதும், ஆயுதப்படையினரினதும் அட்டூழியங்கள் மட்டும் மாறப்போவதில்லை என்றார்.

## பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

காரை மறுமலர்ச்சி மன்றத்தின் 16வது வருடாந்தப பொதுக்கூட்டம், இம்மாதம் 20ந் திகதி மாலை மன்ற முன்றலில் மன்றத்தலைவர் திரு சி. குமாரவேலு தலைமையில் நடைபெறும். [இ]

## திருட்டு

[சங்கானை]

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் ஓட்டைப் பிரித்து உட்புகுந்த இனந்தெரியாத நபர்கள் அம்பாள் விக்கிரகத்தில் இருந்த தங்க நகையையும் உள்ளிருந்த உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

மற்றும் விக்கிரகங்களை உடைத்து அதன் அடியில் வைக்கப்பட்டிருக்கும் இயந்திரத் தகடுகளை எடுத்த முயற்சி பலனளிக்காமையால் அப்படியே விட்டுவிட்டுத் திருடர்கள் சென்றுள்ளனர் சமகானைப் பொலிஸ் சார்ஜன்ட் டில்லன்துரை விசாரணையில் ஈடுபட்டுள்ளார். [உ]

## ஒசிப் பிரயா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாணம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதவான் 22 ரூபா 20 சதம் அபராதம் விதித்தார்.

அபராதம் கட்டாததினால் 1 வார சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ச)

## உயிர் நீர்த்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

நிகழ்ச்சிகள், நடைபெற்றன பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் அஞ்சலி உரைகள் நடைபெற்றன.

தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. த. சந்ததியார் தலைமையில் தமிழ்இளைஞர் பேரவைப பிரமுகர்கள் ஊர்வலமாக வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.